[31st October 1958

Handloom cess fund

* 745 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1957–58-க்கு கைத்தறி செஸ் நிதியின் மூலம் சர்க்காருக்கு கிடைத்த பணம் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : Rs. 125·82 lakhs, of which grants amounted to Rs. 92·09 lakhs and loans amounted to Rs. 33·73 lakhs.

SRI V. K. KOTHANDARAMAN : 1957–58-ஆவது ஆண்டிலே கிடைத்த செஸ் நிதி அவ்வளவையும் கைத்தறிக்காரர்களுக்கு உபயோகப்படுத்தாதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி வேண்டும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : செஸ் நிதி யானது சொஸைடிகளுக்கு காலாகாலத்தில் கிடைக்காததன் காரணமாக, அது காலாகாலத்தில் கிடைத்தால் நெசவாளர்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்பதை முன்னிட்டு, அதை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : I will look into it.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : செஸ் நிதி கிடைப்பதற்கு காலதாமதம் ஆவதால், கூட்டுறவு சங்கங்களை நடத்துவதற்கு முடியாத நிலைமையில் இருக்கின்றன. எனவே, சர்க்கார் செஸ் நிதி கிடைப்பதற்கு முன்பாக கடன் கொடுத்து, அது வந்ததும் கடன் பணத்தை திருப்பி எடுத்துக்கொள்ளும் வகையில் ஏதாவது உதவி செய்ய முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : திருநெல்வேலி, ராமனுதபுரம் மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு நிலையங்களுக்கு 7, 8 லட்சம் ரூபாய் அளவுக்கு தள்ளுபடித் தொகை ஓராண்டு காலத்திற்கு கிடைக்காமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அவர்களுடைய விண்ணப்பங்கள் கவனிக்கப்பட்டதா ?

MR. SPEAKER : This does not arise from the main question. The hon. Member must put a separate question.

SRI A. MARIAPPAN : 1958–59-ல் ஒதுக்கிய தொகையில் 1958 எப்ரல் மாதம் வரையில் தான் ரிபேட் தொகை கொடுக்கப்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? மேற்கொண்டு நடப்பு மாதங்களுக்கு உடனடியாக பணம் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி வேண்டும்.

Art Silk

* 746 *Q.*—SRI S. LAZAR : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நம் ராஜ்யத்தில் ஒரு வருடத்திற்கு நெசவாளர்களுக்குத் தேவையான நார் பட்டு எவ்வளவு ?

(ஆ) நம் ராஜ்யத்தில் உற்பத்தியாகும் நார் பட்டு எவ்வளவு ?

31st October 1958]

(இ) 1958–59-க்கு தேவையான நார் பட்டு கிடைக்கிறதா ?

(ஈ) இல்லையானால், அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) About 5 million pounds.

(*b*) Art silk yarn is not produced in our State.

(*c*) No, Sir.

(*d*) The Government of India and the Joint Controller of Imports and Exports were requested to issue licence to the Madras State Handloom Weavers' Co-operative Society for the import of Rs. 10 lakhs worth of art silk yarn for distribution to the handloom industry in this State. An import licence for Rs. 8 lakhs worth of yarn has been issued. Arrangements are also under examination to secure an allotment of indigenous art silk yarn from the Textile Commissioner for distribution to the handloom weavers in this State.

SRI S. LAZAR : இந்த நூலை நமது நாட்டில் உற்பத்தி செய்வதற்கான முயற்சி ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா ? இதை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை அமைப்பதானால் எவ்வளவு செலவு ஆகும் ?

THE HON. SRI V. RAMAIAH : தனியாக கேள்வி போடவேண்டும்?

SRI A. VEDARATHNAM : இந்த நார்பட்டு எந்த நாடுகளிலிருந்து எவ்வளவு இங்கே இறக்குமதி செய்யப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : தனியாக கேள்வி வேண்டும்.

Financial assistance to the Tirunelveli District Board

* 747 *Q.*—SRI T. VELUCHAMI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have any proposal to help the Tirunelveli District Board by giving financial assistance?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Government have recently sanctioned an advance d.a. grant of Rupees 2,00,000 for 1958–59. The Special Officer has been asked to apply to Government, if necessary, for a repayable advance to meet current expenditure.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி ஜில்லாவில் 25–10–57-ல் கூடிய ஜில்லா அட்வைஸரி கமிட்டியில் ஜில்லா போர்டு கண்டிராக்டர்களுக்கு 28 லட்ச ரூபாய் பாக்கி கொடுக்கவேண்டியிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் அரசாங்கம் ஜில்லா போர்டுக்கு கொடுக்கவேண்டிய பாக்கித் தொகையை துரிதமாகக் கொடுக்க முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா ஜில்லா போர்டுகளின் நிதி நிலைமை மோசமாக இருக்கிறது. இதுபற்றி எல்லா ஜில்லா போர்டுகள் ஸ்பெஷல் அதிகாரிகளையும் கூப்பிட்டு பரிசீலனை செய்து இப்பொழுது ஜில்லா போர்டுகளின் நிதி நிலைமையை எப்படி சரிக்கட்டுவது என்பதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால், இந்த நெருக்கடி சீக்கிரம் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI T. K. SUBBIAH : திருநெல்வேலி ஜில்லா போர்டில் நடப்பு வருஷத்தில் கிராமாந்திர ரோடுகள், ஆஸ்பத்திரிகள் இவைகளை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. அதுமட்டுமல்ல,